කෘෂිකර්ම අමාත්‍යාංශය

கமத்தொழில் அமைச்சு

Ministry of Agriculture

"ගොවිජන මන්දිරය", 80/5, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.

"கொவிஜன மந்திரய", 80/5, ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.

"Govijana Mandiraya", 80/5, Rajamalwatte Avenue, Battaramulla, Sri Lanka.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | NFS/FCG (2) 2016-17 Maha | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2016.08.15 |

## வரவு செலவு முன்மொழிவுகளை அமுல் செய்தல்

## நெல் வயலிற்கு உரித்துடைய நெல் விவசாயிகள் உரங்களைக் கொள்வனவு செய்ய உர நிவாரணப் பணத்தை வழங்கல் (2016/17 - காலபோகம்)

### 1. நிவாரணக் கொள்ளை

1.1 விவசாயிக்கு உரித்தான வயற் காணியின் உச்ச அளவாக 02 ஹெக்டயாரிற்கு உட்பட்டு ஒரு ஹெக்டயாரிற்கு உச்ச அளவாக ஒரு வருடத்திற்கு ரூபா 25,000/- வீதம் 02 ஹெக்டயாரிற்கு உச்ச அளவாக ரூபா 50,000/- ஒரு விவசாயிக்குச் செலுத்தப்படும்.

1.2 ஒரு ஹெக்டயாரைச் சொந்தமாகக் கொண்ட ஒரு விவசாயிக்கு சிறுபோகத்திற்கென ரூபா 12,500/- உம், காலபோகத்திற்கென ரூபா 12,500/- உம் வழங்கப்படுவதோடு, 2 ஹெக்டயார் வயலைச் சொந்தமாகக் கொண்ட ஒரு விவசாயிக்கு சிறுபோகத்திற்கென ரூபா 25,000/- உம், காலபோகத்திற்கென ரூபா 25,000/- உம் வழங்கப்படும். சேதனப் பசளைகளை மாத்திரம் இட்டு பயிரிடும் நெல் வயல் உரிமையாளர்களிற்கும் இந்த உர நிவாரணம் உரித்துடையதாகும்.

1.3 ஒரு ஹெக்டயாரிற்கு ஒரு போகத்திற்கு ரூபா 12,500/- வீதம் 02 ஹெக்டயார் வரை ரூபா 25,000/- கிடைப்பதற்கு வசதியாக விவசாயிக்குச் சொந்தமான வயல் நிலத்தின் பரப்பளவிற்கமைய கிடைக்க வேண்டிய உர நிவாரணத் தொகையானது இக்கடிதத்தின் இறுதியில் தரப்பட்டுள்ளது.

1.4 நெல்லிற்கான உர நிவாரணம் கிடைப்பதற்கு போகக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் எதிர்வரும் போகத்தில் நெற் பயிர்செய்கைக்குத் தடையேற்படாத வகையில் சம்பந்தப்பட்ட போகத்தில் அவ்வயல்களில் பயிரிடப்படும் வேறு பயிர்களிற்கும் அவ்வாறு பயிரிடுவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட காணியின் விஸ்தீரணத்திற்கமைய பொருத்தமான வகையில் இந்த உர நிவாரணத்தை வழங்க முடியும்.

1.5 2016 இல் தேயிலை, தென்னை, இறப்பர் மற்றும் மறு வயற் பயிர்கள் (கிழங்கு, வெங்காயம், சோளம், சோயா, மிளகாய்) ஆகியவற்றின் உர நிவாரணத்திற்கு உரித்துடைய விவசாயிகளிற்கு இந்த உர நிவாரணம் (நெல்லிற்கான உர நிவாரணம்) வழங்கப்பட மாட்டாது.